மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை

முன்னிலை: செ. பி. பர்வத்ராஜ் ஆறுமுகம், பி. ஏ. பி. எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் புதன்கிழமை

இடைநிலை மனுஎண்.3/2022

இன்

அசல் வழக்கு எண்.63/2022

நைனாமலை ....மனுதாரர்/வாதி

/எதிர்/

1. சுந்தரம்
2. நடராஜன்
3. முத்துசாமி
4. N. ராஜ்குமார்
5. K. லோகநாதன்
6. K. கோவிந்தராஜ்
7. S. அசோக்குமார்
8. T. வேல்முருகன்
9. B.விஜயகுமார்
10. ப. கோவிந்தராஜ்
11. K. லோகநாதன்
12. கா. செல்வராஜ்
13. G. கருணாநிதி @ கர்ணன்
14. கை. பிரகாசம்
15. S. சரவணன்
16. K. V. பழனிவேல் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 05.12.2023–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. K. சஷ்டிகுமரன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 16ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்திற்கு அழைத்தும் ஆஜராகததால் தோன்றாதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டும் மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து, இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

உத்தரவு

மனுதாரர்கள்/ வாதிகளுக்கு ஆதரவாக 1 முதல் 16 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக தற்காலிக மற்றும் ஒரு இடைக்கால தடை உறுத்து

கட்டளை பரிகாரம் வழங்க வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம், கட்டளை 39, விதி 1 & 2–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்</u>

2) தாவா சொத்தான பாதை ஆதியில் செங்கோட கவுண்டர் மகன் நல்லெண்ண கவுண்டருக்கு பாத்தியப்பட்ட 0.48 சென்ட் என்றும், மேற்படி 0.48 சென்டில் வாதிக்கு 0.28 சென்ட் கடந்த 06.02.1990 ம் தேதி கிரையமாக கொடுக்கப்பட்டது என்றும், மீதமுள்ள 0.20 சென்டை மேற்படி தேதியில் மலையாளப்பட்டியில் உள்ள நாட்டு கவுண்டர் சங்கத்திற்கு கிரையமாக கொடுத்துள்ளார் என்றும், மேற்படி 0.20 சென்டில் ஆதியில் இருந்து மாரியம்மன் கோவிலும் அமைந்துள்ளது என்றும், இந்நிலையில் கோவிலுக்கு கழிவறை கட்ட மனுதாரர் தனது நிலத்தில் சிறு பகுதியையும், வாய்மொழியாக தானமாக கொடுத்துள்ளார் என்றும், மேற்படி தாவா பாதையானது மொத்தம் கிழமேல் 200–ஜாதியடி நீளமும், தென்வடல் 20–அடி அகலமும் கொண்டதாகும் என்றும், தாவா பாதைக்கு மேற்கில் வாதிக்கு சொந்தமான வீடு மற்றும் சர்வே எண்.625/10, 626/1, 627/4 , 628/1, 628/4 ஆகிய விவசாய நிலங்களும் உள்ளன என்றும், மேற்படி தாவா சொத்தை மனுதாரர்/வாதிக்கு கிரையம்கொடுத்த நல்லெண்ணக்கவுண்டர் கிரையபத்திரத்தில் தென்வடல் பொதுபாதை வழியே வந்து கிழமேலாக போய் வரும் பாதை பாத்தியம் உண்டு என்றும், இந்நிலையில் கடந்த 24.04.2022 அன்று 4 முதல் 16 வரையுள்ள பிரதிவாதிகள் ஒன்று சேர்ந்து கொண்டு, மனுதாரர்/வாதிக்கு சொந்தமான வீட்டை இடிக்க வேண்டும் என்றும், மண் மற்றும் கல்லை கொண்டு அடைக்க வேண்டும் என்று தீர்மானம் போட்டு மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட வீட்டிற்கு செல்லும் பாதையில் மண்கொட்டி அடைத்துள்ளனர் என்றும், மேலும் சர்வே எண்.627/4–ல் மலையாளப்பட்டி நாட்டு கவுண்டர் சங்கத்திற்கு சொந்தமான கோவிலை சுற்றி மனுதாரர்/வாதிக்கு சொந்தமான தாவா பாதையை அடைத்து சுற்றுசுவர் எடுக்கப்போவதாகவும் கூறி வருகிறார்கள் என்றும், எதிர்மனுதார்கள்/பிரதிவாதிகளின் சட்டத்திற்கு முரணான செயல்களை சமூகம் நீதிமன்ற தடை உத்தரவினால் மட்டுமே தடைசெய்யக்கூடும் என்றும், எனவே 1 முதல் 16 வரையிலான எதிர்மனுதாரர்களுக்கு / பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு

முடியும் வரை இடைக்கால தடையுத்தரவும், இவ்வழக்கின் விசாரணை முடியும் வரை தற்காலிக தடை உத்தரவும், வழங்கிட கோரியும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) 1 முதல் 16ம் எதிர்மனுதாரர்கள் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாதரப்பினர் நிலைக்கு வைக்கப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதியாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>தீர்வு</u>

6) மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கட்டினை பரிசீலித்த வகையில் அசல் வழக்கானது மனுதாரர்/வாதி, எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக தாவா சொத்து பொருத்து நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.மனுவினை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாதபோதும் எதிர்மனுதாரர்கள் தாவா சொத்தை மனுதாரர் அனுபவிப்பதை இடையூறு செய்திருந்தால் மனுதாரர் முன்கூட்டியே இம்மனுவின் மீது போதிய அழுத்தம் செலுத்தி உத்தரவு பெற்றிருக்க முடியும் என்றும், தற்போது அசல் வழக்கானது வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் அசல் வழக்கிலும் இம்மனுவில் கோரிய பரிகாரம் கோரப்பட்டுள்ளதாலும் அசல் வழக்கில் இம்மனுவில் கோரிய பரிகாரம் குறித்தும் தீர்மானிக்க முடியும் என்பதாலும் மேலும் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் வழங்கிய State of Uttar Pradesh – v – Ram Sukhi Devi, reported in (2005) 9 SCC 733 என்ற வழக்கில்,"By an interim order, a final relief cannot be granted. In other words no interim relief, which amounts to a final relief, should be granted at the initial stage." என்றும் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய Bank of Tokyo Mitusubishi Limited, Mumbai –Vs– Spartex Ceramics India Limited, Chennai and others reported in (2007) 3 MLJ 203 என்ற வழக்கில்," ...... in deciding interlocutory applications, the Court cannot grant the main relief sought for in the suit ast the interim stage which in other words, would tantamount to a pre–trial decree." என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொண்டு ஆராய்கையில், இவ்வழக்கில் மனுதாரர் தாவா சொத்து பொறுத்து

எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரத்தையும் ஒரு பரிகாரமாக கோரியுள்ள நிலையில் மேற்படி முன்தீர்ப்புரைகள் இவ்வழக்கிற்கும் பொருந்தி வருவதாகவே இந்நீதிமன்றம் கருதியும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சத்தில் அது வழக்கு விசாரணைக்கு முந்தைய தீர்ப்பாணையாக ஆகி வழக்கு விசாரணையை பாதிக்கும் என்று கருதியும் மேலும் அசல் வழக்கு விசாரணைக்காக தயாராக உள்ள நிலையில் இம்மனுவில் கோரியுள்ள பரிகாரத்தை அசல் வழக்கிலேயே வழக்கு விசாரணையின் மூலம் முழுவதுமாக தீர்மானிக்க முடியும் என்று கருதியும் இம்மனுவில் கண்டுள்ள சட்ட தகுதிகளுக்குள் (Merit) செல்லாமல் இம்மனுவை அனுமதிப்பது மேற்கண்ட முன்தீர்ப்புரையின் படி ஏற்கத்தக்கதல்ல என்று கருதி செலவுத்தொகையின்றி இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2024–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 07–ம் நாள் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறியப் பகரப்பட்டது.

ஒம்/– செ.பி. பர்வத்ராஜ் ஆறுமுகம்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

ஒம்/– செ.பி. பர்வத்ராஜ் ஆறுமுகம்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.